தமிழ்நாடு அரசு

# சமூக அறிவியல்

## பத்தாம் வகுப்பு

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2011

திருத்திய பதிப்பு – 2013, 2014, 2015, 2016, 2017

(பொதுப்பாடத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)

பாடநூல் உருவாக்கம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி எஸ் எம் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

# பொருளடக்கம்


| அலகு | பாட எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| | | **வரலாறு** | |
| I. | 1. | ஏகாதிபத்தியம் – இந்தியா, சீனா | 1 |
| II. | 2. | முதல் உலகப்போர் (கி.பி.1914 – கி.பி.1918) – சர்வதேச சங்கம் | 11 |
| III. | 3. | இருஉலகப்போர்களுக்கிடையே உலக நிலை (கி.பி.1919–கி.பி.1939)– பொருளாதாரப் பெருமந்தம் | 23 |
| | 4. | இத்தாலியில் பாசிசம் (கி.பி.1922–கி.பி.1945) | 27 |
| | 5. | ஜெர்மனியில் நாசிசம் (கி.பி1933–கி.பி.1945) | 31 |
| IV. | 6. | இரண்டாம் உலகப் போர் (கி.பி.1939–கி.பி.1945) | 36 |
| | 7. | ஐக்கிய நாடுகள் சபை | 44 |
| | 8. | ஐரோப்பிய ஒன்றியம் | 50 |
| V. | 9. | 1857 ஆம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சி | 55 |
| VI. | 10. | 19 ஆம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள் | 65 |
| VII. | 11. | இந்திய விடுதலை இயக்கம் – முதல் நிலை–காந்திக்கு முந்தைய சகாப்தம் (கி.பி.1885 – கி.பி.1919) | 76 |
| | 12. | இந்திய விடுதலை இயக்கம் – இரண்டாம் நிலை – காந்திய சகாப்தம் (கி.பி. 1920–கி.பி1947) | 85 |
| | 13. | இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ் நாட்டின் பங்கு | 100 |
| VIII. | 14. | தமிழ்நாட்டில் சமுதாய மாற்றங்கள் | 108 |
| | | **புவியியல்** | |
| I. | 1. | இந்தியா – அமைவிடமும் இயற்கை அமைப்பும் | 118 |
| | 2. | இந்தியா – காலநிலை | 143 |
| II. | 3. | இந்தியா – இயற்கை வளங்கள் | 156 |
| III. | 4. | இந்தியா – வேளாண்தொழில் | 178 |
| | 5. | இந்தியா – தொழிலகங்கள் | 194 |
| | 6. | சுற்றுச்சூழல் பிரச்சனைகள் | 206 |
| IV. | 7. | இந்தியா – வணிகம், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு | 214 |
| V. | 8. | தொலை நுண்ணுணர்வு | 232 |
| | 9. | பேரிடர் அபாயநேர்வு குறைப்பு | 240 |

## குடிமையியல்

| | | | |
|---|---|---|---|
| I. | 1. | இந்தியாவும் உலக அமைதியும் | 244 |
| II. | 2. | மக்களாட்சி | 249 |
| | 3. | வேற்றுமையில் ஒற்றுமை | 257 |
| III. | 4. | நுகர்வோர் உரிமைகள் | 261 |

## பொருளியல்

| | | | |
|---|---|---|---|
| I. | 1. | நாட்டு வருமானம் | 267 |
| II. | 2. | விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரம் | 275 |

# வினாத்தாள் வடிவமைப்பு – 10 ஆம் வகுப்பு
## வரலாறு, குடிமையியல்

| வரலாறு | புறவய வினாக்கள் (1 மதிப்பெண்) | | | குறு வினாக்கள் (2 மதிப்பெண்) | | | தலைப்பு வினாக்கள் (4 மதிப்பெண்) | | | பத்தி வினாக்கள் (5 மதிப்பெண்) | | | வரைபடம் (1 மதிப்பெண்) | காலக் கோடு | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | | தி | |
| அலகு-I | - | 1 | - | 1 | - | - | - | - | 1 | 1 | - | - | 5 | | |
| அலகு-II | 1 | - | - | - | 1 | - | | | | | | | | ✓ | |
| அலகு-III | 1 | - | - | 1 | - | - | - | - | 1 | | | | | | |
| அலகு-IV | 1 | - | - | - | 1 | - | | | | | | | | ✓ | |
| அலகு-V | - | 1 | - | 1 | - | - | - | 1 | - | - | - | 1 | 5 | | |
| அலகு-VI | 1 | - | - | - | 1 | - | | | | | | | | | |
| அலகு-VII | - | 1 | - | 1 | - | - | 1 | - | - | - | 1 | - | | ✓ | |
| அலகு-VIII | 1 | 1 | - | - | 1 | - | | | | | | | | | |
| மொத்த மதிப்பெண் | 9 | | | 16 | | | 16 | | | 15 | | | 10 | 5 | 71 |
| குடிமையியல் | | | | | | | | | | | | | | | |
| அலகு-I | 1 | - | - | 1 | - | - | | | | 1 | - | - | | | |
| அலகு-II | - | 1 | - | - | 1 | - | | | | - | 1 | - | | | |
| அலகு-III | - | - | 1 | - | - | - | | | | - | - | 1 | | | |
| மொத்த மதிப்பெண் | 3 | | | 4 | | | - | | | 15 | | | | | 22 |

குறிப்பு: "✓" காலக்கோடு அட்டவணை கேட்கப்படும் அலகுகள்
"உ" உலக வரைபடம்
"இந்தியா" இந்தியா வரைபடம்
"அ" அறிதல், "பு" புரிதல், "ப" பயன்படுத்துதல், "தி" திறன்

## வினாத்தாள் வடிவமைப்பு – 10 ஆம் வகுப்பு
## புவியியல், பொருளியல்

| புவியியல் | புறவய வினாக்கள் (1 மதிப்பெண்) | | | குறு வினாக்கள் (2 மதிப்பெண்) | | | வேறுபடுத்துதல் (2 மதிப்பெண்) | | | பத்திவினாக்கள் (5 மதிப்பெண்) | | | வரைபட திறன் (1 மதிப்பெண்) | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | | |
| அலகு-I | 2 | - | - | 1 | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 15 | |
| அலகு-II | 2 | - | - | - | 1 | - | - | 1 | - | - | | - | | |
| அலகு-III | 2 | - | - | 2 | 1 | - | 1 | 1 | 1 | - | 1 | - | | |
| அலகு-IV | 2 | - | - | - | 1 | - | 1 | 1 | - | - | | - | | |
| அலகு-V | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | 1 | | |
| மொத்த மதிப்பெண் | 9 | | | 16 | | | 16 | | | 15 | | | 15 | 71 |
| | | | | | | | | | | | | | | |
| பொருளியல் | | | | | | | | | | | | | | |
| அலகு-I | 1 | - | - | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | 8 |
| அலகு-II | 2 | - | - | - | - | 1 | - | - | - | - | 1 | 1 | - | 14 |
| மொத்த மதிப்பெண் | 3 | | | 4 | | | - | | | | 15 | | | 22 |

# வரலாறு

## 1. ஏகாதிபத்தியம் – இந்தியா, சீனா

### ஏகாதிபத்தியம்

ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஒரு மாபெரும் எழுச்சி ஏற்பட்டது. இந்த எழுச்சியால் ஐரோப்பிய வல்லரசுகள் தங்களின் ஆதிக்கத்தை மற்ற நாடுகளின் அரசியலிலும், பொருளாதாரத்திலும் நிலைநாட்ட முற்பட்டன. இதையே நாம் ஏகாதிபத்தியம் என அழைக்கின்றோம். ஏகாதிபத்தியம் என்ற சொல் இம்பிரியம் (Imperium) என்ற லத்தின் சொல்லிலிருந்து வந்தது. இதன் பொருள் ஆதிக்கம் (Power) என்பதாகும்.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் (அல்லது) ஒரு நாட்டின் ஆட்சி மற்றொரு நாட்டின் மீது திணிக்கப்படுதல் (அல்லது) ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களைத் தன் வசப்படுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகும்.

### காலனி ஆதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியம்

கி.பி.1492ஆம் ஆண்டு முதல் கி.பி.1763ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய கொள்கை காலனிஆதிக்கம் என அழைக்கப்–படுகிறது. இக்கால கட்டத்தில் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகள் தங்களின் குடியேற்றங்களை ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களில் ஏற்படுத்தின.

காலனி ஆதிக்கம் என்பது குடியேற்றங்களை அந்நிய நாட்டில் ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களைச் சுரண்டுதல் ஆகும். மேலும், இது உள்நாட்டு பெரும்பான்மையினருக்கும் அந்நிய சிறுபான்மையினருக்கும் இடையில் ஏற்பட்ட நெருடலான உறவு ஆகும்.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாட்டின் கொள்கையாகும். இது கொள்கை ரீதியாகவும், பொருளாதார காரணங்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது. ஏகாதிபத்தியம் என்பது கொள்கை, காலனி ஆதிக்கம் என்பது நடைமுறைபடுத்தப்பட்ட ஆதிக்கம் ஆகும்.

கி.பி.1763 ஆம் ஆண்டு முதல் கி.பி.1870 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஐரோப்பிய நாடுகள் பல போர்களிலும், நாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. 1870இல் இத்தாலி மற்றும் ஜெர்மனி ஒருங்கிணைக்கப்பட்ட பிறகு, அந்நாடுகள் ஆசியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில் தங்களின் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சித்தன. கி.பி.1870 ஆம் ஆண்டு முதல் கி.பி.1945ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய நாடுகளால் பின்பற்றப்பட்ட ஏகாதிபத்தியக் கொள்கை புதிய ஏகாதிபத்தியம் என அழைக்கப்பட்டது.

### I. முக்கிய ஏகாதிபத்திய அமைப்புகள்

19 ஆம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் மூன்று முக்கிய அமைப்புகளாகக் காணப்பட்டன.

#### 1. இராணுவ ஏகாதிபத்தியம்

நாடுகள் தங்களின் படைகளை அனுப்பி மற்ற நாடுகளில் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதை இராணுவ ஏகாதிபத்தியம் என்கிறோம்.

எடுத்துக்காட்டாக, அமெரிக்கா ஈராக்கின் மீது படையெடுத்து அங்கு தன் நாட்டிற்குச் சாதகமான ஒரு அரசை ஏற்படுத்தியது.

#### 2. அரசியல் ஏகாதிபத்தியம்

நாடுகளின் தலைவர்களைத் தன் ஆளுமையின் கீழ் கொண்டு வந்து, அவர்கள் மூலம் மறைமுக ஆட்சியை

ஏற்படுத்துவது அரசியல் ஏகாதிபத்தியம் எனப்படும்.

எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றி தங்களுடைய அலுவலர்களை நியமித்து ஏற்கனவே இருந்த அரசியல் அமைப்பைத் தங்களுக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்துக் கொண்டனர்.

### 3. பொருளாதார ஏகாதிபத்தியம்

ஒரு நாடு மற்றொரு நாட்டின் பொருளாதார அதிகாரத்தை தன்வசப்படுத்தி, அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்தி கொள்ளுவதே பொருளாதார ஏகாதிபத்தியம் என்கிறோம்.

எடுத்துக்காட்டாக, மஞ்சு வம்ச அரசர்கள், சீனாவை அரசியல் ரீதியாக சுதந்திரமாக ஆட்சி செய்த போதும், ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் அதன் பொருளாதாரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டனர்.

## II. ஏகாதிபத்தியம் ஏற்படக் காரணங்கள்

### 1. தொழிற்புரட்சி (Industrial Revolution)

ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக பொருள்களின் உற்பத்தி அதிகரித்தது. எனவே, ஐரோப்பிய நாடுகளுக்கு உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனைக்கான சந்தைகளும் தேவைப்பட்டன. தொழிற்புரட்சியினால் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டது. இரயில்வே துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் மூலப் பொருட்களை தொழிற் சாலைகளுக்கும், விற்பனை பொருள்களைச் சந்தைக்கும் விரைவாக எடுத்துச் செல்ல பேருதவி புரிந்தது. ஐரோப்பிய நாடுகளில் தொழில் பாதுகாப்புச் சட்டம் பின்பற்றப்பட்டதால், உள்நாட்டு சந்தைகளில் தங்களின் பொருள்களை விற்க இயலவில்லை. தொழிற்புரட்சி மலராததின் காரணமாக ஆசியா மற்றும் ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகள் நல்ல சந்தைகளாகவும் மூலப் பொருள்களை அளிக்கும் இடங்களாகவும் செயல்பட்டன. எனவே ஐரோப்பியர்கள் அந்நாடுகள் மீது உரிமை கொள்ள விழைந்தனர்.

### 2. தேசியப் பாதுகாப்பு (National Security)

தனது நாட்டின் செல்வ வளம் அயல்நாட்டில் முதலீடு செய்யப்படும்போது அதன் பாதுகாப்பிற்காக அந்நாடுகளைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவர ஐரோப்பிய நாடுகள் விரும்பின.

### 3. தேசியமயமாக்கல் (Nationalisation)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அதிதீவிர நாட்டுப்பற்றுக் கொள்கை ஐரோப்பாவில் ஏற்பட்டது. பல நாடுகள் தங்களின் இனப்பெருமை, பண்பாட்டுப்பெருமை, மொழிப்பற்று ஆகியவற்றைப் பெரிதும் வளர்த்துக் கொண்டன. அந்நாடுகள் தம் நாட்டு பெருமையை நிலைநாட்ட, வளர்ச்சி குன்றிய நாடுகளின் மீது ஆதிக்கம் செய்ய விரும்பின. தம் நாட்டின் கௌரவத்தை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு அதிகக் குடியேற்ற நாடுகளை அடைய விரும்பின. ஏகாதிபத்தியம் அக்கால நாகரிகமாகக் கருதப்பட்டது. மேலும் ஐரோப்பிய வெள்ளை இன மக்கள் தங்களை உயர்வாகவும், கருப்பின ஆப்பிரிக்க ஆசிய மக்களுக்கு நாகரிகம் கற்றுத்தருவது தங்களின் பெரும் சுமை என்று கருதியதும் ஏகாதிபத்தியம் ஏற்பட வழிவகை செய்தது எனலாம்.

### 4. சமநிலை ஆதிக்கம் (Balance of Power)

சமநிலை ஆதிக்கம் பெற ஐரோப்பிய நாடுகள், தங்களுக்குப் போட்டியாக உள்ள நாடுகள் மற்றும் அண்டை நாடுகளுக்கு இணையாக குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முற்பட்டன.

### 5. புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு

ஆப்பிரிக்க, ஆசியக்கண்டங்களை அடையக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வழித் தடங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை ஊக்குவித்தன. புதிய கடல் வழித்தடங்கள்

வணிகர்களுக்கும், இராணுவத்திற்கும் குடியேற்ற நாடுகளில் உள்ள பெரும் செல்வத்தைச் சுரண்ட பேருதவியாக இருந்தன.

### 6. மக்கள் தொகைப்பெருக்கம் (Growth of Population)

மக்கள்தொகைப் பெருக்கம், அதன் விளைவாக ஏற்பட்ட வேலையின்மை ஐரோப்பியர்களை குடியேற்றங்களுக்காகவும் மற்றும் வேலை வாய்ப்பிற்காகவும் வேறு நாடுகளைத் தேடிச் செல்லத் தூண்டியது.

### 7. சட்ட ஒழுங்கின்மை (State of Anarchy)

முதலாம் உலகப்போருக்கு முன் உலக நாடுகளைக் கட்டுப்படுத்தி நாடுகளுக்கிடையே அமைதியை வளர்க்கவும் பாதுகாப்பை வலுப்படுத்தவும் சட்டங்கள் இயற்றக் கூடிய சர்வதேச அமைப்பு இல்லை. இந்த சட்ட ஒழுங்கற்ற நிலை குடியேற்றங்களைக் கைப்பற்றுவதற்கு வழி வகுத்தது.

## III. ஏகாதிபத்தியம் – வழிமுறைகள்

ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த பல வழிமுறைகள் கையாளப்பட்டன.

### 1. போர் மற்றும் கையகப்படுத்துதல் (Conquest and Annexation)

ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த பல வழிமுறைகள் கையாளப்பட்டன. நவீன காலத்தின் தொடக்கத்தில் ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகளால் அனுப்பப்பட்ட படை வீரர்கள் பல நாடுகளின் தலைமையை வீழ்த்தி, அங்கு ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டினர். இது போர் மூலம் நாடுகளைக் கையகப்படுத்துதல் முறையாகும்.

### 2. சலுகைகள் அல்லது உரிமைகள் (Concession of Franchise)

சில நேரங்களில் தீவிர அமைப்புகள், பிற்படுத்தப்பட்ட நாடுகளின் பொருளாதார வளங்களை சுரண்டும் பிரத்தியேக உரிமையைப் பெற்றிருந்தன. இதற்கு சலுகைகள் அல்லது உரிமைகள் முறை என்று பெயர். துருக்கியில் நீண்ட இரயில்பாதை அமைக்கும் பிரத்தியேக உரிமையை ஜெர்மனியைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் பொறியாளர்கள் குழு பெற்றிருந்தது.

### 3. குத்தகை உரிமை (Leasehold)

சில நாடுகள் தங்கள் குடியேற்ற நாடுகளிடமிருந்து ஒரு நிலப்பகுதியை குத்தகைக்குப் பெற்று அங்குள்ள பொருளாதார வளங்களைச் சுரண்டி வந்தன. பின்னர் அந்தக் குத்தகை நிலங்களின் மீது தங்களது அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தின. ஜெர்மானியப் பேரரசு சீனாவிடம் இருந்து ஷாண்டுங் தீபகற்பத்தின் மீது 99 ஆண்டுகளுக்கான குத்தகை உரிமம் பெற்றிருந்தது.

### 4. செல்வாக்கை நிலைநாட்டுதல் (Sphere of Influence)

'செல்வாக்கை நிலைநாட்டுதல்' என்னும் முறைப்படி சில நாடுகள் குடியேற்ற நாடுகளில் சில பகுதிகளில் பொருளாதாரத்தைச் சுரண்டும் தனி உரிமையை ஏற்படுத்திக் கொண்டன. உதாரணமாக 1907 ஆம் ஆண்டு பிரிட்டன் மற்றும் ரஷ்யா, பாரசீக நாட்டைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. ஐரோப்பிய நாடுகள் சீனாவிலும் இதே வழிமுறையையே பின்பற்றின.

### 5. பாதுகாப்பு ஏற்படுத்துதல் (Protectorate)

பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுடன் பொம்மை ஆட்சி (puppet rule) உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு மாபெரும் நிலப்பரப்பைத் தங்கள் வசப்படுத்தி, பின்னர் அதனைச் சுரண்ட முற்பட்டனர். இத்தகைய முறைக்கு 'பாதுகாப்பு ஏற்படுத்துதல்' என்று பெயர். உதாரணம், 1912–ஆம் ஆண்டு பிரான்ஸ் மொராக்கோ மீது தனது பாதுகாப்பை நிலை நாட்டியது.

### 6. பொருளாதாரம் அல்லது வரிக் கட்டுப்பாடு (Economic or Tariff control)

சில சமயங்களில் வலிமையான ஒரு நாடு வலிமை குறைந்த ஒரு நாட்டின்

மொத்த பொருளாதார அதிகாரங்களை தன் வயப்படுத்திக் கொள்ளுதல் பொருளாதார அல்லது வரிக்கட்டுப்பாடு முறையாகும். உதாரணமாக முதலாம் உலகப்போருக்கு முன் துருக்கியில் அனைத்துப் பொருளாதார அமைப்புகளும், ஆட்டோமான் பொதுக் கடன் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த நிர்வாகத்தில் இருந்த அனைவருமே ஐரோப்பிய அதிகாரிகள் ஆவர்.

### 7. ஒப்படைப்பு முறை (Mandate system)

இது புதிய ஏகாதிபத்தியத்தின் இறுதி வழிமுறையாகும். இது 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரீஸ் அமைதி மாநாட்டில் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த ஜெனரல் ஜான் ஸ்மட் என்பவரின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்டது. முந்தைய கால குடியேற்ற நாடுகளில் பலவும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளும் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இச்சங்கம் சில கட்டுப்பாடுகளுடன், இத்தகைய நாடுகளைப் பராமரிக்கும்படி பல நாடுகளிடம் கேட்டுக்கொண்டது. இத்தகைய நாடுகளை, "நிர்வாக ஒப்படைப்பு ஏற்ற நாடுகள்" என்று அழைக்கின்றோம்.

## IV. ஏகாதிபத்தியத்தின் விளைவுகள்

**1. சாதகமான விளைவுகள் :** வலிமை மிக்க நாடுகள் வலிமையற்ற நாடுகளில் போக்குவரத்து மற்றும் தொடர்புத்துறையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தின. அந்நாடுகள், குடியேற்ற நாடுகளுக்கு கல்வி வழங்கி, மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறைகளை மேம்படுத்தின. புதிய விவசாய முறைகளைக் கையாண்டு உணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தன. இத்தகைய மாற்றங்கள் குடியேற்ற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தின. இது நாடுகளில் அமைதி, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமையை வளர்த்தன.

**2. பாதகமான விளைவுகள் :** குடியேற்ற நாடுகள் தங்களின் சுதந்திரத்தை இழந்தன. மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டதோடு அவர்கள் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர். குடியேற்ற நாடுகள் மூலப்பொருள்களை வழங்குவதற்கும் பொருள்களின் விற்பனைச் சந்தைகளாகவும் மட்டுமே விளங்கின. அந்நாடுகளில் உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டு, ஏழ்மையும், வேலையின்மையும் அதிகரித்தன. பாரம்பரிய விவசாய முறை மாற்றப்பட்டு, உணவுப் பொருள் உற்பத்திக்குப் பதிலாக மூலப்பொருள்களை பயிரிடும்படி அந்நாட்டு மக்கள் நிர்பந்திக்கப்பட்டனர். மேற்கத்திய கலாச்சார அறிமுகம், பாரம்பரிய கலாச்சாரத்தின் அழிவுக்கு வழிகோலியது. அடிமை வியாபாரத்தின் காரணமாக சில ஆப்பிரிக்க இனங்களின் மறைவுக்கும் இது காரணமாயிற்று. சில குடியேற்ற நாடுகளில் இன வேறுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட, ஏகாதிபத்தியமே காரணமாயிற்று.

## இந்தியாவில் ஏகாதிபத்தியம்

இந்தியாவில் அரசர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி மனப்பான்மையும் ஒற்றுமையின்மையும் ஏகாதிபத்தியம் தோன்றக்காரணமாகும். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1600 ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்டது. அது பின்னர் இந்தியாவில், அப்போது ஆட்சி செய்த முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரின் அனுமதி பெற்று சூரத்தில் தனது வியாபாரத் தளத்தை ஏற்படுத்தியது. அதன் பின் முகலாயர்கள் ஆங்கிலேயர்களுக்கு வணிகம் புரிவதற்கான உரிமையை வழங்கியதோடு, தொழிற்சாலைகள் அமைப்பதற்கான உரிமைகளையும் வழங்கினர். இதற்கு பதிலாக ஆங்கிலேயக் கப்பற்படை, முகலாயர்களை போர்ச்சுக்கீசியர்களிடமிருந்து பாதுகாத்தது. கி.பி.1664 இல் பிரெஞ்சு– கிழக்கிந்திய வணிகக் குழு பதினான்காம் லூயியின் அமைச்சராக விளங்கிய கால்பெர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவில் தங்களது வணிகத்தளங்களை ஏற்படுத்தியது. அதன் காரணமாக பிரான்சு – இங்கிலாந்து இடையே பகைமை உருவாகி இதன்

காரணமாக கர்நாடகப் போர்கள் ஏற்பட்டன. இப்போர்களின் இறுதியில் இந்தியாவில், ஆங்கிலேயர்கள் பிரான்சின் செல்வாக்கை அடியோடு அழித்தனர்.

ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த வரியில்லா வணிகம் என்னும் முறைக்கு, வங்காள நவாப் சிராஜ்உத் தெளலா எதிர்ப்பு தெரிவித்தார். இது 1757–ஆம் ஆண்டு இராபர்ட் கிளைவின் தலைமையில் பிளாசிப்போர் ஏற்படக் காரணமாயிற்று. இப்போரின் முடிவில் கிழக்கிந்திய வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா மற்றும் கல்கத்தா அருகிலுள்ள 24 பர்க்கானாக்கள் வரியில்லா வணிகம் செய்ய தடையில்லா உரிமையைப் பெற்றது. கிழக்கிந்திய வணிகக்குழு பக்சார் போருக்குப் (கி.பி.1764) பிறகு, வங்காளத்தை ஆளும் தனி உரிமையை முகலாய மன்னர் இரண்டாம் ஷா ஆலமிடமிருந்து பெற்றது. இதுவே கிழக்கிந்திய வணிகக்குழு ஆட்சியின் ஆரம்பமாகும். வெல்லெஸ்லி பிரபு தனது துணைப் படைத்திட்டத்தின் மூலமும், டல்ஹௌசி தனது வாரிசு இழப்புக் கொள்கை மூலமும், கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சியை விரிவுபடுத்தினர். இதனை எதிர்த்து 1857–ல் பெருங்கலகம் ஏற்பட்டது. இதனை அடக்கிய பின், ஆங்கில அரசு மகாராணியார் விக்டோரியா அவர்களின் பெயரால் (விக்டோரியா அறிக்கை) 1858–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பேரறிக்கை மூலம் கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. விக்டோரியா மகாராணியார் இந்தியாவைத் தனது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார். அன்று முதல் 1947–ல் சுதந்திரம் பெறும் வரை இந்தியா, ஆங்கில அரசின் கீழ் ஒரு குடியேற்ற நாடாகவே விளங்கியது.


## சீனாவில் ஏகாதிபத்தியம்

சீனாவில் ஏகாதிபத்தியம் ஏற்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். பழமையான நாகரிகத்தைத் தன்னகத்தே கொண்ட சீனர்கள், தங்களை மற்றவர்களைவிட உயர்வாகவும் நாகரிகம் மிக்கவர்களாகவும் கருதினர். ஆசிய நாடுகளைச் சார்ந்த வணிகர்கள் சீனக் கலாச்சாரத்தை ஏற்ற போதிலும், ஐரோப்பிய வணிகர்கள் அதனை ஏற்க மறுத்தனர். எனவே 1757–ல் சீனப்பேரரசர் அந்நிய வணிகத்தை காண்டன் (Canton) மற்றும் மக்காவோ (Macao) நகரங்களுடன் நிறுத்தும்படி கட்டளையிட்டார். இதனால் ஐரோப்பியர்கள், சீனா மீது சினங்கொண்டனர்.

அவர்கள் முறையற்ற வாணிகத்தைக் கடைபிடித்தனர். இதுவே புகழ்பெற்ற அபினிப்போருக்கு அடிகோலியது.

## முதலாம் அபினிப் போர்
## கி.பி1839 – கி.பி1842

ஆங்கிலேயர்கள் அபினிச் செடியை இந்தியாவில் வளர்த்து, அதனைச் சட்ட விரோதமாக சீனாவில் சீனப் பொருள்களுக்கு மாற்றாகவும் சில சமயங்களில் தங்கத்திற்கு ஈடாகவும் விற்பனை செய்தனர். இது தங்களின் மன நிம்மதியைக் குலைப்பதாக சீனர்கள் எண்ணினர். அதேசமயம் அதிக சுங்கவரி விதிப்பும், வளர்ந்துவரும் அபினி வணிகத்தை ஒடுக்க சீன அரசாங்கம் எடுத்த நடவடிக்கையும், ஐரோப்பிய வணிகர்களை எரிச்சலடைய வைத்தன. 1800 ஆம் ஆண்டில், சீனப் பேரரசு அபினி வணிகத்தைத் தடை செய்தது. எனினும் அபினி வணிகம் மேன்மேலும் வளர்ந்து கொண்டேதான் இருந்தது. அபினி வணிகத்தில் பெரும்பங்கு வகித்த ஆங்கிலேயர்கள் சீனப்பேரரசின் தடையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர எண்ணி, சீனாமீது 1839–ல் போர் தொடுத்தனர். இதுவே முதலாம் அபினிப்போர் என அழைக்கப்பட்டது. இப்போரில் சீனா தோற்கடிக்கப்பட்டு கி.பி.1842–ல் நான்கிங் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சீனா ஹாங்காங் தீவை நிரந்தரமாக இங்கிலாந்துக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது மற்றும் போர் இழப்பீடாக பெருந்தொகையை வழங்கியதோடு ஐந்து துறைமுகங்களில் வணிகம் செய்ய ஆங்கிலேயர்களுக்கு அனுமதி


ஆசியாவில் ஏகாதிபத்தியம்
வ
சக்கலின் தீவு
மஞ்சூரியா
மங்கோலியா
ஜப்பான்
கொரியா
பீகிங்
நான்கிங்
ஷாங்காய்
சீனா
பசிபிக் பெருங்கடல்
பார்மோசா
ஹாங்காங்
காண்டன்
பிலிப்பைன்ஸ்
துருக்கி
ஈரான்
பாகிஸ்தான்
திபெத்
நேபாளம்
சவுதி அரேபியா
செங்கடல்
பர்மா
இந்தியா
தாய்லாந்து
அரபிக்கடல்
வங்காளவிரிகுடா
மலேசியா
சிங்கப்பூர்
இலங்கை
இந்தியப் பெருங்கடல்

வழங்கியது. மேலும் இந்தியாவிற்கு ஆங்கிலேயர் தங்கள் பொருள்களை இந்தியப் பொருள்களுக்கு மாற்றாக இந்தியாவில் இறக்குமதி செய்தனர். ஆனால் சீனர்கள் தேயிலையையும் காப்பியையும் ஆங்கிலேயருக்கு தங்கத்திற்கு மாற்றாக விற்றனர். இது ஆங்கிலேயரை காலப்போக்கில் பெருமளவு தங்கத்தை சீனர்களிடம் இழக்க வைத்தது. குற்றவியல் வழக்குகளில் ஆங்கிலேயர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் வழங்கப்பட்டன.

### தைப்பிங் கலகம் கி.பி.1854

நான்கிங் உடன்படிக்கையைப் பின்பற்றி அமெரிக்கர்களும், பிரெஞ்சுக்காரர்களும் மற்றும் பிற அந்நிய நாட்டவர்களும் பல ஒப்பந்தங்களை சீனாவுடன் ஏற்படுத்திக்கொண்டனர். எனவே 1854–ஆம் ஆண்டு மஞ்சு அரசுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் எதிராக சீனர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இக்கலகம் தைப்பிங் கலகம் (Taiping Re-bellion) என்றழைக்கப்பட்டது. இக்கலகம் ஒடுக்கப்பட்டது.

### இரண்டாம் அபினிப் போர் கி.பி.1857–கி.பி.1860

வெளிநாட்டவர்கள், தங்களுக்கு பல துறைமுகங்கள் திறக்கப்படவேண்டும் என்று கோரினர். இதை மஞ்சு அரசு நிராகரித்தபோது ஆங்கில மற்றும் பிரெஞ்சுப் படைகள் காண்டன் துறைமுகத்தை தாக்கிக் கைப்பற்றின. இது இரண்டாவது அபினிப்போர் என்று அழைக்கப்படுகிறது. இதில் சீனர்களின் தோல்வி கி.பி1860–ல் பீகிங் உடன்படிக்கை ஏற்படக் காரணமாயிற்று. இவ்வுடன்படிக்கையின் மூலம் ஆங்கிலேயர்கள் கௌலூன் (Kowlon) துறைமுகத்தைப் பெற்றனர். மேலும்,பல துறைமுகங்களையும் சீன அரசு வெளிநாட்டவர்களுக்கு தாரை வார்த்தது.

### பாக்சர் புரட்சி

இரண்டாவது அபினிப் போருக்குப் பின் சீனாவில் சிறிது காலம் அமைதியான சூழ்நிலை நிலவியது. 1894–ஆம் ஆண்டு நடைபெற்ற சீன–ஜப்பானியப் போரில் சீனா படுதோல்வியடைந்ததன் காரணமாக, பார்மோசா தீவை (தைவான்) ஜப்பானியர்களிடம் ஒப்படைத்தது. இதனால் சீனர்கள் மஞ்சு அரசர்கள் மீது கோபம் கொண்டனர். பழைய புத்தர் என அழைக்கப்பட்ட சீனப் பேரரசி தவேகர், (Empress Dowagar) அரசின் மீது கோபமுற்ற சீன இளைஞர்களை, வெளிநாட்டவர்களின் மீது திசை திருப்பினார். அரசியாரின் தூண்டுதலின் படி சீன இளைஞர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியாளர்கள் (பாக்சர்கள்) ஆங்கில, பிரெஞ்சு மற்றும் ஜெர்மானியக் குடியேற்றங்களையும் கிறிஸ்துவர்களையும் 1899–ல் தாக்கினார்கள். இது பாக்சர் புரட்சி என்று அழைக்கப்பட்டது.



பேரரசி தவேகர் ஆசி

### ஏகாதிபத்தியத்தின் முடிவு

வெளிநாட்டவர்களின் கூட்டுப்படை, பாக்சர் கலகத்தை அடக்கிய பின்னர் சீனத் தலைநகர் பீகிங் வந்தடைந்தது. ஆனால் அரசியார் தவேகர் தலைமறைவாகி தப்பி ஓடினார். பின்னர் அமெரிக்காவும் இங்கிலாந்தும் திறந்தவெளிக் கொள்கையை (Open door Policy) உருவாக்கின. இதன்படி சீன நாட்டை, வெளிநாட்டவர்கள் தங்களுக்கிடையே வாணிக உரிமைக்காகப் பங்கிட்டுக் கொண்டனர். இவ்வாறாக சீனா பன்னாட்டுக் குடியேற்ற நாடாக மாறியது. பாக்சர் கலகத்தின் படிப்பினை, 1911–ம் ஆண்டு புரட்சிக்கு வித்திட்டு, சீனா குடியரசு நாடாக டாக்டர். சன்யாட்சென்னின் தலைமையில் உருவாகக் காரணமாக அமைந்தது.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டு

   அ) 1870 ஆ) 1872 இ) 1780 ஈ) 1782

2. மூலப்பொருட்களின் தேவையை அதிகப்படியாக உருவாக்கியது

   அ) தொழிற்புரட்சி ஆ) தகவல் தொழில் நுட்ப புரட்சி

   இ) பிரெஞ்சு புரட்சி ஈ) வேளாண்மைப் புரட்சி

3. 1870 முதல் 1945 வரை ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய ஏகாதிபத்தியக் கொள்கை

   அ) நவீன ஏகாதிபத்தியம் ஆ) அரசியல் ஏகாதிபத்தியம்

   இ) புதிய ஏகாதிபத்தியம் ஈ) இராணுவ ஏகாதிபத்தியம்

4. சீனா அரசியல் ரீதியான சுதந்திரம் பெற்ற ஆட்சிக் காலம்

   அ) சின் ஆட்சிக் காலம் ஆ) ஷாங் ஆட்சிக்காலம்

   இ) சூ ஆட்சிக்காலம் ஈ) மஞ்சு ஆட்சிக்காலம்

5. பொருள்களின் போக்குவரத்தை அதிகரிக்கச் செய்தது.

   அ) இரயில்வே அ) சாலை இ) வான் ஈ) நீர்

6. ஐரோப்பிய நாடுகளில் 'செல்வாக்கை நிலைநாட்டுதல்' என்ற கொள்கையைப் பின்பற்றியது.

   அ) ஜப்பான் ஆ) சீனா இ) இந்தியா ஈ) பர்மா

7. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

   அ) கி.பி.1600 ஆ) கி.பி.1664 இ) கி.பி.1644 ஈ) கி.பி.1700

8. பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக்குழுவை நிறுவியவர்.

   அ) பதினான்காம் லூயி ஆ) கால்பர்ட் இ) பதினாறாம் லூயி ஈ) டி பிராஸா

9. இரண்டாம் அபினி போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்படிக்கை

   அ) பீகிங் ஆ) நான்கிங் இ) காண்டன் ஈ) ஷான்டுங்

10. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து சீனாவிற்காக ஏற்படுத்திய கொள்கை

    அ) திறந்த வெளிக் கொள்கை ஆ) வாரிசு இழப்புக் கொள்கை

    இ) பாதுகாக்கப்பட்ட வியாபாரக் கொள்கை ஈ) நிலம் அழித்தல் கொள்கை

11. ஆங்கிலேய கிழக்கிந்தியக் குழுமத்திற்கு சூரத்தில் வணிக மையம் அமைக்க அனுமதியளித்த முகலாய மன்னர்.

    அ) ஷாஜகான் ஆ) ஜஹாங்கீர் இ) ஔரங்கசீப் ஈ) ஹீமாயூன்

12. சீனக் குடியரசை உருவாக்கியவர்.

    அ) டாக்டர் சன் யாட்சென் ஆ) சூ– யென் – லாய்

    இ) மா சேதுங் ஈ) சீயாங் கே ஷேக்

## ஆ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. கர்நாடகப் போர்கள் | ஆசியா |
| 2. பாதுகாப்பு ஏற்படுத்துதல் | சீனா |
| 3. இனவெறிக் கொள்கை | இங்கிலாந்து |
| 4. ஹாங்காங் தீவு | இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்க முடிவு |
| 5. பன்னாட்டு குடியேற்றம் | பிரான்ஸ் |
| | ஏகாதிபத்தியம் |
| | ஆப்பிரிக்கா |

## இ. குறுகிய விடையளி.

1. ஏகாதிபத்தியம் வரையறு.
2. காலனி ஆதிக்கம் என்றால் என்ன ?
3. இராணுவ ஏகாதிபத்தியம் பற்றி எழுதுக.
4. ஏகாதிபத்தியம் தோன்ற தொழிற் புரட்சி எவ்வாறு முக்கியக் காரணமாக அமைந்தது ?
5. பொருளாதாரம் அல்லது வரிக்கட்டுப்பாட்டைப் பற்றி எழுதுக.
6. ஒப்படைப்பு முறை பற்றி சுருக்கமாக எழுதுக.
7. முதலாம் அபினிப் போருக்கான காரணங்கள் யாவை ?
8. சீனா பன்னாட்டு குடியேற்ற நாடாக எவ்வாறு மாறியது ?
9. ‘தைப்பிங் கலகம்’ பற்றி எழுது.

## ஈ. கீழ்க்கண்ட தலைப்புகளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

### 1. ஏகாதிபத்தியம் உருவாகுவதற்கு காரணங்கள்.

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நாகரிகமானதாகக் கருதப்பட்டது எது ?

ஆ) வெள்ளையர்களின் சுமை என ஐரோப்பியர்களால் கருதப்பட்டது யாது ?

இ) ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முனைந்தது ஏன் ?

ஈ) ஏகாதிபத்தியக் கொள்கையை ஊக்குவித்தது யாது ?

### 2. பிளாசி மற்றும் பக்சார் போர்.

அ) 1757 ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார் ?

ஆ) துணைப் படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார் ?

இ) டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது ?

ஈ) விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது ?

3. சீனாவில் ஏகாதிபத்தியம்.

அ) மாக்காவோ மற்றும் காண்டன் நகரங்களுக்கு வியாபாரத் தடை ஏன் விதிக்கப்பட்டது ?

ஆ) சீனா எந்தெந்த பொருள்களை இங்கிலாந்திற்கு விற்பனை செய்தது ?

இ) சீன அரசியின் பெயர் என்ன ? அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார் ?

ஈ) திறந்த வெளிக் கொள்கையைக் உருவாக்கியவர்கள் யாவர் ?

4. பாக்சர் புரட்சி.

அ) சீன–ஜப்பானிய போரின் விளைவு யாது ?

ஆ) சீனா, ஜப்பானிற்கு அளித்த தீவு எது ?

இ) பாக்சர் கலகத்திற்கான காரணம் யாது ?

ஈ) பாக்சர்கள் என்ன செய்தார்கள் ?

உ. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

1. ஏகாதிபத்தியத்திற்கான காரணங்கள் யாவை ?
2. ஏகாதிபத்தியம் எந்தெந்த வழிமுறைகளில் ஏற்படுத்தப்பட்டது ?
3. ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை ?
4. முதலாம் மற்றும் இரண்டாம் அபினிப் போர்களைப் பற்றி விவரி.

ஊ. செயல் முறை.

ஆசியா வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

பீகிங், காண்டன், ஹாங்காங், பார்மோசா, கொரியா, நான்கிங், மஞ்சூரியா, சாகலின் தீவுகள், ஜப்பான், பசிபிக் பெருங்கடல்.

# 2. முதல் உலகப்போர் (கி.பி 1914 –கி.பி 1918)

## சர்வதேச சங்கம்

கி.பி.19 – ஆம் நூற்றாண்டின் ஆட்சியாளர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்கள் எதிர்பார்த்த வண்ணம் உலக அமைதிக்கு ஏற்பட்ட பங்கமே முதல் உலகப்போர் என்று கருதப்படுகிறது,

உலக வரலாற்றில் முதல்முறையாக உலகின் பெரும்பான்மை நாடுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இப்போரில் பங்கேற்றன. எனவே இப்போர் உலகப்போர் என அழைக்கப்பட்டது. உலகிலுள்ள அனைத்து நாடுகளின் மனித மற்றும் பிற வளங்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியதால், இப்பெரும்போர் முதல் உலகப்போர் என அழைக்கப்பட்டது.

### I. போருக்கான காரணங்கள்

#### 1. ஜெர்மனியின் பேராசை

1870 ஆம் ஆண்டு ஜெர்மனி ஒருங்கிணைந்த பிறகு, அங்கு தொழிற்துறையில் வளர்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாக ஏராளமான மூலப்பொருள்களும், பொருள்களை விற்பனைச் செய்ய சந்தையும் தேவைப்பட்டன. இங்கிலாந்து மற்றும் பிரான்சு போன்று ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள் வளம்மிக்கவைகளாக இல்லை. கெய்சர் இரண்டாம் வில்லியம் உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை மற்றும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என்று கருதினார். அவரால் ஆங்கிலேயர்களின் கூற்றான 'ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதேயில்லை' என்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. உலக அரங்கில் தனது மதிப்பை உயர்த்துவது மட்டுமின்றி, வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் ஜெர்மனிக்கு குடியேற்றங்கள் தேவைப்பட்டன. எனவே ஜெர்மனியின் பாதுகாப்பிற்கு இரண்டாம் கெய்சர் வில்லியம் படை வலிமையைப் பெருக்கி வடகடலில் உள்ள ஹெலிகோலாண்ட் (Heligoland) என்னுமிடத்தில் கப்பற்படையை நிறுத்தினார். ஜெர்மனியின் இத்தகைய பேராதிக்க நடவடிக்கைகள் முதல் உலகப் போருக்கு முக்கியக் காரணமாக அமைந்தன.

#### 2. இரகசிய உடன்படிக்கைகள் (Secret Alliances)

ஐரோப்பிய நாடுகள் இருபெரும் பகை பிரிவுகளாகப் பிரிந்திருந்தன. இந்த இரு பகைப் பிரிவு நாடுகளிடையே உருவான இரகசிய உடன்படிக்கைகள் மற்றும் இராணுவ ஒப்பந்தங்கள், பகைமையையும், சந்தேகங்களையும் ஏற்படுத்தி முதல் உலகப்போருக்கு வழிவகுத்தது.

முக்கூட்டு உடன்படிக்கை (Triple Alliance) 1882 ஆம் ஆண்டு இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா–ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகளுக்கிடையே ஏற்பட்டது. 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்து, பிரான்சு, இரஷ்யா முதலிய நாடுகள் தங்களுக்கிடையே முக்கூட்டு நட்புறவு உடன்படிக்கை (Triple Entente) செய்து கொண்டன. இத்தகைய இரகசிய இராணுவ உடன்படிக்கைகள் ஐரோப்பாவில் பெரும் போர்ச் சூழலை ஏற்படுத்தின.

#### 3. சர்வதேச அமைப்பு இல்லாமை (Lack of International Organisation)

உலக நாடுகளுக்கிடையே காணப்பட்ட ஆதிக்க வெறியை தடுப்பதற்கான, வலிமைபெற்ற சர்வதேச அமைப்புகள் இல்லை. 1882 மற்றும் 1907 ஆம் ஆண்டு நடைபெற்ற தி ஹேக் (The Hague) மாநாடு, சர்வதேச அமைப்பை ஏற்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின.

#### 4. இராணுவக்கொள்கை (Militarism)

இராணுவக் கொள்கை போருக்கு முக்கிய காரணமாகும். ஐரோப்பிய

வல்லுநர்கள் 'அமைதி வேண்டின் போருக்குத் தயாராகுங்கள்' என முழங்கினர். புதிய திட்டங்களின் மூலம் இரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி தங்களின் படைபலத்தை விரிவுபடுத்தின. பிரிட்டன் கப்பல் படைக்காக அதிகம் செலவிட்டது. பிரான்சு தன்னைத் தாக்கும் என்ற எண்ணத்தில் ஜெர்மனி தனது பலத்தை அதிகரிக்கத் தொடங்கியது.

### 5. குடியேற்றம் மற்றும் வணிகப்போட்டி (Colonial and Commercial rivalry)

பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட நிலவியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் ஒரு புதிய வேகத்தை ஏற்படுத்தியது. தொழிற்புரட்சியின் விளைவாக மூலப் பொருள்களுக்கும் அதே சமயம் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கான சந்தையும் தேவைப்பட்டன. ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்கெனவே ஐரோப்பிய நாடுகள் தங்கள் காலனிகளை ஏற்படுத்தியிருந்தன. ஜெர்மனி ஒருங்கிணைப்பிற்கு பிறகு தன் நிலையை வலுப்படுத்திக் கொண்டது. இந்நிலையில் தொழில் துறையிலும் வணிகத்துறையிலும் ஜெர்மனியின் முன்னேற்றம் இங்கிலாந்தை வெறுப்புறச் செய்தது. இது போருக்கு வித்திட்டது.

### 6. மொராக்கோ பிரச்சனை

ஆப்பிரிக்க நாடான மொராக்கோவை பிரான்சு கைப்பற்றியது. இதனை பிரிட்டன் அங்கீகரித்தது. ஆனால், ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம், மொராக்கோவை ஒரு சர்வதேச குடியேற்ற நாடாக்க விரும்பினார். எனவே, அவர் பெர்லின், பான்தர் என்ற இருபோர்க் கப்பல்களை மொராக்கோவிற்கு அனுப்பினார். ஆனால், இங்கிலாந்து மொராக்கோ பிரச்சனையில் தலையிட்டதால், ஜெர்மனி தனது இரு போர்க்கப்பல்களையும் மொராக்கோவிலிருந்து விலக்கிக் கொண்டது. எனவே ஜெர்மனி இங்கிலாந்தை பழி வாங்க விரும்பியது. இது போருக்கு வழி வகுத்தது.

### 7. பால்கன் பிரச்சனை

ஆட்டோமானிய துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்த பால்கன் பகுதி நாடுகளான செர்பியா, பல்கேரியா, அல்பேனியா, கிரீஸ் மற்றும் மாண்டிநீக்ரோ போன்ற நாடுகள், துருக்கி பலவீனமடைந்ததையடுத்து தங்களது சுதந்திரத்தை அறிவித்துக்கொண்டன. 1912 ஆம் ஆண்டு பால்கன் நாடுகள்– துருக்கிக்கு எதிராகப் போரை அறிவித்தன. இது முதல் பால்கன் போர் எனப்பட்டது. இப்போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டு, லண்டன் உடன்படிக்கையின் மூலம் போர் முடிவுக்கு வந்தது. போரின் முடிவில் கிடைத்த பகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் செர்பியாவிற்கும் பல்கேரியாவிற்குமிடையே பிரச்சனைகள் ஏற்பட்டன. இதனால் 1913 ஆம் ஆண்டு மற்ற பால்கன் நாடுகள் பல்கேரியா மீது போரை அறிவித்தது. இது இரண்டாம் பால்கன் போர் எனப்பட்டது. போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டு, செர்பியா பெரும் பகுதிகளைத்தன்னோடு சேர்த்துக்கொண்டது. தோற்கடிக்கப்பட்ட துருக்கியும், பல்கேரியாவும் தங்களது பகுதிகளைத் திருப்பிப் பெற ஜெர்மனியிடம் உதவி கோரின. இது போருக்கு வழி வகுத்தது.

### 8. பிரான்சின் ஆர்வம்

பிரான்சு – பிரஷ்யா இடையே நடைபெற்ற பிராங்கோ–பிரஷ்யப் போரின் விளைவாக தான் இழந்த அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடமிருந்து திரும்பப் பெற வேண்டுமென்று பிரான்சு விரும்பியது. இப்பகுதிகள் ஜெர்மனியினுடைய தொழில் வளர்ச்சிக்கு மூலக்காரணமாக விளங்கின. எனவே இப்பகுதிகளை திரும்பப்பெற வேண்டுமென்று பிரான்சு நினைத்தது.

### 9. உடனடிக்காரணம் (செராஜிவோ படுகொலை)

1878 ஆம் ஆண்டு நடைபெற்ற பெர்லின் மாநாட்டில் போஸ்னியா மற்றும்

ஹெர்சிகோவினா பகுதிகளை ஆட்சி செய்யும் உரிமை ஆஸ்திரியா–ஹங்கேரிக்கு வழங்கப்பட்டது. ஆனால் அவற்றை இணைத்துக்கொள்ள கூடாது என அறிவிக்கப்பட்டது. செர்பியர்கள் அதிகமாக வாழும் போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா பகுதிகளை செர்பியாவிற்கு வழங்கியிருக்கவேண்டும். ஆனால் 1908 ஆம் ஆண்டு, பெர்லின் மாநாட்டு முடிவிற்கு மாறாக, செர்பியப்பகுதிகளை ஆஸ்திரியா தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. இது ஆஸ்திரியா, செர்பியா இடையே பகைமையை ஏற்படுத்தியது.

இச் சூழ்நிலையில் 1914–ஜீன் 28 ஆம் நாள் போஸ்னிய தலைநகர் செராஜிவோ நகரில் செர்பிய தீவிரவாத இளைஞன் ஒருவனால் ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர் பிரான்சிஸ் பெர்டினான்டும், அவரது மனைவி இசபெல்லாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது குறித்து விளக்கம் அளிக்கவேண்டும் என ஆஸ்திரியா கோரியது. ஆனால் செர்பியாவின் பதில், ஆஸ்திரியாவிற்கு திருப்தி அளிக்காததால், ஆஸ்திரியா 1914 ஆம் ஆண்டு ஜீலை 28 ஆம் தேதி செர்பியா மீது போரை அறிவித்தது.

இரஷ்யா, ஆஸ்திரியாவிற்கு எதிராக செர்பியாவிற்கு உதவிக்கரம் நீட்டி, தனது படைகளை அனுப்பியது. இதனைக் கண்ட ஜெர்மனி, இரஷ்யாவிற்கு எதிராக போரை அறிவித்தது. பிரான்சு தனது நட்பு நாடான இரஷ்யாவிற்கு ஆதரவாக போரில் இறங்கியது. எனவே ஜெர்மனி, பிரான்சு மீது போர் அறிவிப்பு செய்தது. இதனைக் கண்ட இங்கிலாந்து, பிரான்சுடன் சேர்ந்து கொள்ளவே முதல் உலகப்போர் தொடங்கியது.

## II. போரின் போக்கு

முதல் உலகப் போர் 1914 ஆம் ஆண்டு சூலை மாதம் 28 ஆம் நாள் தொடங்கி 1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாள் முடிவுற்றது. போரின்போது ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும் மைய நாடுகள் (Central Powers) எனவும், இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும் நேசநாடுகள் (Allied) எனவும் அழைக்கப்பட்டன. பீரங்கிப்படை மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் போரில் உபயோகப்படுத்தப்பட்டன.

### 1. மேற்கு முனைப் போர்க்களம்

ஜெர்மனி, பெல்ஜியம் வழியாக பிரான்சின் மீது படையெடுத்தது. ஜெர்மனியின் முன்னேற்றத்தை ஆங்கிலேய–பிரெஞ்சுப் படைகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆங்கில–பிரெஞ்சுப் படைகள் மார்ன் நதிக்கரைப் போரில் ஜெர்மானியப் படைகளைத் தடுத்து முன்னேறாமல் இருக்கச் செய்தனர். இரு படைகளும் பதுங்கு குழிப்போர் முறையைப் பின்பற்றினர்.

### 2. கிழக்கு முனைப் போர்க்களம்

இரஷ்யப் படைகள் ஜெர்மனியையும், ஆஸ்திரியாவையும் தாக்கின. ஆனால் டானென்பர்க் போரில் இரஷ்யா படுதோல்வியுற்றது. இச்சமயத்தில் ஆஸ்திரியா துன்புறவே, ஜெர்மனி அதற்கு ஆதரவு அளித்தது. ஜெர்மனியின் கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் இரஷ்யப் படைகள் ஆஸ்திரியப் பகுதிகளை விட்டு வெளியேறின.

### 3. கிழக்குமுனை அருகாமைப் போர்க்களம்

1914 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் துருக்கி, மைய நாடுகளுக்கு ஆதரவாக போரில் இறங்கியது. இது ரஷ்யாவுக்கும் அதனோடு உள்ள கூட்டணி நாடுகளுக்கும் இடையே உள்ள தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு சாட்டை அடியாக மாறிற்று . ஆங்கிலப் படை டார்டனல்ஸ் பகுதியை கட்டுப்படுத்தும் பொருட்டும், கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றி கலிபோலி (Gallipoli) பகுதிகளைப் பிடிக்கத்திட்டமிட்டது. ஆனால் டார்டனல்ஸ் பகுதியைப் பிடிக்கும் முயற்சியில் முற்றிலும் தோல்வியைத் தழுவியது.

**4. போரில் பல்கேரியா மற்றும் ருமேனியா**

1915ஆம் ஆண்டு டார்டனல்ஸ் போரில் ஆங்கிலப் படைக்கு ஏற்பட்டதோல்வி பல்கேரியாவை மைய நாடுகள் பக்கம் சேர வைத்தது. 1916 ஆம் ஆண்டு ருமேனியா, நேச நாடுகளுடன் சேர்ந்தது.

**5. கடற்போர்**

ஆங்கில கப்பற்படை வடகடல் பகுதியை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தபோது, பிரெஞ்சுப்படையும் இத்தாலியப்படையும் சேர்ந்து பிரிட்டனின் ஆதரவுடன் மத்தியத் தரைக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தின. டாகர் நதிக்கரை போரில், ஜெர்மானியப் படைகள் ஆங்கில படைகளால் அழிக்கப்பட்டன. 1916 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜுட்லாண்டு போரில் ஜெர்மானியப் படைகள் தோல்வியுற்று பின்வாங்கின. ஆங்கிலேயர்களின் கப்பற்படைக் கட்டுப்பாட்டைத் தகர்க்க முடியாததால், ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களைப் போரில் இறக்கியது. நீர்மூழ்கிக் கப்பல் போர் முறையினால் நேசநாடுகளின் போர்க்கப்பல்கள் பல மூழ்கடிக்கப்பட்டு பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டது.

**6. அமெரிக்கா போரில் ஈடுபடுதல்**

1917 ஆம் ஆண்டு அமெரிக்கக் கொடிகளை ஏந்திய லூசிடானியா உட்பட நான்கு வணிகக்கப்பல்களை ஜெர்மானிய நீர்மூழ்கிக்கப்பல் மூழ்கடித்தன.



லூசிடானியா – அமெரிக்க கப்பல்

இதில் நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சி அமெரிக்க குடியரசுத்தலைவர் உட்ரோவில்சனை கோபமுறச் செய்தது. எனவே அவர் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல்–6 ஆம் நாள் ஜெர்மனி மீது போர் அறிவிப்பு செய்தார்.

**7. இரஷ்யா பின் வாங்குதல்**

முதல் உலகப் போரினால் இரஷ்யா பெருமளவு பாதிக்கப்பட்டது. பெருமளவு உயிரிழப்பும், பொருளாதார சீரழிவும் ஏற்பட்டது. இதனால் மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. இதன் வெளிப்பாடாக 1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி இரஷ்யாவில் தோன்றியது. இப்புரட்சியினால், இரஷ்யாவை ஆட்சி செய்து வந்த சார் மன்னரின் ஆட்சி, லெனினால் தூக்கி எறியப்பட்டது. எனவே இரஷ்யா போரிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டது. 1918ஆம் ஆண்டு பிராஸ்ட்–லிடோஸ்க் உடன்படிக்கையினை மைய நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்டது.

**8. போரின் முடிவு**

ஆரம்பத்தில் மையநாடுகள் சில வெற்றிகளைப் பெற்றபோதிலும், இறுதியில் அவை தோல்வியைத் தழுவின. ஜெர்மனி போரில் தோல்வியைத் தழுவியது. இதனை கண்ணுற்ற துருக்கியும், பல்கேரியாவும் அச்சமடைந்தன. ஆஸ்திரியா சமாதானத்தை எதிர் நோக்கியது. ஜெர்மானியப்பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம், போரைச் சமாளிக்க முடியாமல் தனது பதவியைத் துறந்து ஹாலந்து நாட்டுக்கு தப்பியோடினார். எனவே வேறு வழியின்றி ஜெர்மனி, 1918 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் அமைதியை நாடியது.

**III. போரின் விளைவுகள்**


1919 ஆம் ஆண்டு பாரீசில் நடைபெற்ற அமைதி மாநாட்டின் மூலம் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியத் தலைவர்கள், பிரான்சு நாட்டு கிளமென்சு, பிரிட்டன் நாட்டு லாயிட் ஜார்ஜ், இத்தாலி நாட்டு ஆர்லண்டோ, அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் ஆகியோர் ஆவர். ஜெர்மனி அமைதி


முதல் உலகப் போரில் ஐரோப்பா
வ
ஐஸ்லாந்து
நார்வே
ஸ்வீடன்
பின்லாந்து
ரஷ்யா
எஸ்டோனியா
டென்மார்க்
அயர்லாந்து
இங்கிலாந்து பேரரசு
பெலோ ரஷ்யா
டானென்பர்க்
போலந்து
நெதர்லாந்து
பெல்ஜியம்
ஜெர்மனி
உக்ரைன்
மார்ன் நதி
செக் குடியரசு
ஸ்லோவேகியா
பிரான்ஸ்
ஹங்கேரி
ருமேனியா
ஜார்ஜியா
இத்தாலி
செர்பியா
போர்ச்சுக்கல்
ஸ்பெயின்
துருக்கி
டார்டனெல்ஸ்
சிரியா
ஈராக்
ஈரான்
சைப்ரஸ்
அல்ஜீரியா
மொராக்கோ
துனிசியா

உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. இது வெர்செயில்ஸ் உடன்படிக்கை என்று அழைக்கப்பட்டது. மேலும் இம் மாநாட்டில் பல்வேறு உடன்படிக்கைகள் தோல்வியுற்ற நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டன. ஜெர்மைன் உடன்படிக்கை (Treaty of Germaine) ஆஸ்திரியாவுடன் செய்து கொள்ளப்பட்டது. ஹங்கேரியுடன் டிரையனான் (Traianon) உடன்படிக்கையும், பல்கேரியாவுடன் நியூலி (Neuilly) உடன்படிக்கையும், துருக்கியுடன் செவ்ரேஸ் (Severes) உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டன. அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் 14 அம்சக் கோட்பாடுகளின் அடிப்படையில் உடன்படிக்கையின் சரத்துகள் வரையப்பட்டன.

### வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள்

1. சர்வதேச சங்கத்தின் வடிவமைப்பு வரையறுக்கப்பட்டது.
2. ஜெர்மனியின் படைகள் குறைக்கப்பட்டு, அதன் மீது பெரும் போர் இழப்பீடு சுமத்தப்பட்டது.
3. ஜெர்மனி தன்னிடமிருந்த அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைத்தது. மேலும் நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ள சார் பகுதிகளை 15 ஆண்டுகளுக்கு வைத்துக் கொள்ளும் குத்தகை உரிமையையும் பிரான்சுக்கு அளித்தது.
4. ஜெர்மனியின் கடல்கடந்த குடியேற்றங்களை, வெற்றி பெற்ற நாடுகள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டன.
5. ஜெர்மனி, இரஷ்யா, ஆஸ்திரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டது.
6. பல்வேறு நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. செக்கோஸ்லோவாகியா மற்றும் போலந்து நாட்டில், குடியரசுகள் தோன்றின.
7. ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி குடியரசுகள் அங்கீகரிக்கப்பட்டன.
8. டான்சிக் நகருக்கு சர்வதேச அங்கீகாரம் அளிக்கப்பட்டது.
9. லிதுவேனியா, லாட்வியா மற்றும்



பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள்

எஸ்தோனியா நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

10. வெற்றிபெற்ற நாடுகள் தோல்வியுற்ற நாடுகள் மீது தேவையற்ற, சாதகமற்ற உடன்படிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தின. இது மற்றுமொரு உலகப்போருக்கு வித்திட்டது.

## சர்வதேச சங்கம் 1920 (League of Nations)

முதல் உலகப் போர், உலக நாடுகளில் மிகப்பெரும் பொருள் சேதத்தையும், உயிர்சேதத்தையும் ஏற்படுத்தியது. உலக நாடுகள் அனைத்தும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, இப்போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டன.



உட்ரோ வில்சன்

எனவே இனி உலகில் இத்தகைய போர் ஏற்படாமல் தடுக்க ஒரு சர்வதேச அமைப்பு தேவை என்பதை உலக நாடுகள் உணர்ந்தன. அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் முயற்சியால் 1919 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாரிசில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது. இதில் 42 நாடுகள் கலந்து கொண்டன. இம்மாநாட்டில் பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் இடம் பெற்ற முக்கியத் தலைவர்கள்உட்ரோ வில்சன்(அமெரிக்கா), லாயிட்ஸ் ஜார்ஜ் (பிரிட்டன்), ஜார்ஜ் கிளமென்சு (பிரான்சு) மற்றும் ஆர்லாண்டோ (இத்தாலி) ஆவர். இக்குழுவின் ஆலோசனைப்படி உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும், போர் மீண்டும் ஏற்படுவதை தடுக்கவும் நாடுகளிடையே ஒற்றுமையை வளர்க்கவும் சர்வதேச சங்கம் தேவை என்று முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் 1920 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாள் சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவா நகரில் நிறுவப்பட்டது.



சர்வதேச சங்கம் தலைமையகம் –ஜெனீவா

சர்வதேசசங்கம் அமைக்கப் படுவதற்கு முன்பே 1. சர்வதேசச் சமுதாயம் (1915) 2. உலக அமைதிக் கூட்டமைப்பு (1917) 3. சுதந்திர நாடுகளின் சர்வதேச சங்கம் (1918) போன்ற அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

## சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகள்

1. உலகநாடுகளிடையே ஒற்றுமை, பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டுவது.
2. உறுப்பு நாடுகள் தங்கள் அண்டை நாடுகளின் எல்லைகளை மதித்து நடத்தல், அந்நாடுகளில் ஆக்கிரமிப்பு செய்யாமலிருத்தல்.
3. உறுப்பு நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை சர்வதேச சங்கத்தின் மூலம் சுமூகமான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் நாடுகள் குறைந்தது மூன்று மாதங்களாவது சர்வதேச சங்கத்தின் முடிவுக்காகக் காத்திருக்க வேண்டும்.

4. உறுப்பு நாடுகள் ஏதேனும் சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளை மீறி மற்ற நாடுகளை ஆக்கிரமிப்பு செய்தால், பாதிப்புக்குள்ளான நாட்டை ஆயுதங்களைக் கொடுத்தாவது பாதுகாக்க வேண்டும்.

5. சர்வதேச சங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான எல்லா உடன்படிக்கைகளையும் கைவிடுதல் போன்றவை சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளாகக் கருதப்பட்டன.

### சர்வதேச சங்கத்தின் அங்கங்கள்

1. பொதுச்சபை
2. நிர்வாக சபை
3. செயலகம்
4. சர்வதேச நீதி மன்றம்
5. சர்வதேச தொழிலாளர் அமைப்பு

### சர்வதேச சங்கத்தின் சாதனைகள்

சர்வதேச சங்கம் நடைமுறையிலிருந்த 20 ஆண்டுகளில் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு நல்கி, சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்ததில் ஓரளவு வெற்றி பெற்றது.

1. பின்லாந்து – சுவீடன் இடையே பால்டிக் கடல்பகுதியில் அமைந்துள்ள ஆலந்து தீவு உரிமைப் பிரச்சினையை தீர்த்து வைத்தது.
2. சைலீசியாவின் எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து போலந்து–ஜெர்மனி இடையே போர் ஏற்படுவதை தடுத்தது.
3. கிரீஸ் நாட்டிற்கும் இத்தாலிக்கும் இடையே ஏற்பட்ட கார்ஃபூ தீவுப்பிரச்சினையை தீர்த்து வைத்தது.
4. கிரீஸ் நாட்டிற்கும் பல்கேரியாவிற்கும் இடையே ஏற்பட்ட எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
5. ஜெர்மனி 1926–ம் ஆண்டு சர்வதேச சங்கத்தில் இணையவும், அதனைத் தொடர்ந்து 1934 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யா சங்கத்தில் இணையவும் நடவடிக்கை மேற்கொண்டது.
6. பெரு நாட்டிற்கும், கொலம்பியாவிற்கும் இடையே ஏற்பட்ட எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
7. தனது பிற அமைப்புகள் மூலம் உலக நாடுகளில் பரவிய பல்வேறு நோய்களைதீர்க்கப் பாடுபட்டது.
8. அகதிகள் மற்றும் தொழு நோயாளிகள் மறு வாழ்விற்காக பேருதவி புரிந்தது. இதன் மூலம் நாடுகளிடையே பண்பாடு கூட்டுறவு வளரவும் பாடுபட்டது.
9. உலக நாடுகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும் பாடுபட்டது.
10. சர்வதேச நீதி மன்றம் 30 வழக்குகளை சந்தித்து அதில் சில வழக்குகளுக்கு தீர்வுகளையும் சில வழக்குகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

### சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள்

சர்வதேச சங்கம் தன்னுடைய கொள்கையான, நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளை அமைதியான முறையில் தீர்த்து வைப்பது என்ற அடிப்படைக் கொள்கையில் முழுமையாக வெற்றிபெற இயலவில்லை. இது உறுப்பு நாடுகளால் உருவாக்கப்பட்ட குறையேயன்றி, சர்வதேச சங்கத்தினால் ஏற்பட்ட குறையன்று.

1. சர்வதேச சங்கம் அமைவதற்குக் காரணமாக இருந்தவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர். ஆனால் அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் உறுப்பினராக ஆகவில்லை. இதனால் சர்வதேச சங்கம் வலுவான அடித்தளமில்லாத கட்டிடம் போல் வலுவிழந்து போனது.

2. சங்கத்தின் முடிவுகளுக்கு உடன்படாத உறுப்பு நாடுகள், சங்கத்திலிருந்து வெளியேறலாம் என்ற உரிமை வழங்கப்பட்டு இருந்தது, சங்கத்தைச் செயல் இழக்கச் செய்தது.

3. 1931 ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றி. மஞ்சுக்கோ எனப்பெயர் மாற்றம் செய்து அதில் ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தியது. இதனை சர்வதேச சங்கம் எதிர்த்த போது, ஜப்பான் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து வெளியேறியது. இது சர்வதேச சங்கத்தை செயல் இழக்கச் செய்தது.

4. சர்வதேச சங்கம் தனக்கென ஒரு நிரந்தர படையினை வைத்துக் கொள்ளவில்லை. இதனால் தனது முடிவுகளை செயல்படுத்த இயலவில்லை.

5. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானில் தோன்றிய சர்வாதிகாரம், சர்வதேச சங்கத்தின் தோல்விக்கு முக்கியக் காரணம் ஆகும்.

6. சர்வதேச சங்கத்தில் செல்வாக்கு பெற்றிருந்த தலைவர்கள் நடைமுறைச் சிக்கலுக்கு தீர்வு காண தவறினர். எனவே இச்சங்கம் முட்டாள்களின் சங்கம் என குறிப்பிடப்பட்டது.

இக்குறைகள் அனைத்தும் சர்வதேச சங்கம் தோல்வி அடைவதற்கு காரணங்களாக அமைந்தன. இருப்பினும் தன்னால் இயன்றவரை பல பிரச்சனைகளுக்கு சர்வதேச சங்கம் தீர்வு காண முயற்சி செய்தது. இது இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் சபை (UNO) அமைய முன்னோடியாக அமைந்தது.

முதல் உலகப் போர் (1914 – 1918)

| மைய நாடுகள் | நேச நாடுகள் |
|---|---|
| ஜெர்மனி<br>ஆஸ்திரியா – ஹங்கேரி<br>பல்கேரியா<br>துருக்கி | பிரிட்டன்<br>பிரான்ஸ்<br>ரஷ்யா<br>ருமேனியா<br>அமெரிக்கா |

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்தும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது எனக் கூறியவர்.

அ) பிஸ்மார்க் ஆ) கெய்சர் இரண்டாம் வில்லியம்

இ) ஹிட்லர் ஈ) முசோலினி

2. கெய்சர் இரண்டாம் வில்லியம் கப்பற்படையை நிறுத்தியிருந்த இடம்.

அ) ஹெலிகோலாந்து ஆ) ஹாலந்து இ) ஜூட்லாந்து ஈ) அயர்லாந்து

3. பிரான்சு திரும்பப் பெற விரும்பிய இடங்கள்.

அ) அல்சேஸ் மற்றும் லொரைன் ஆ) போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா

இ) ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி ஈ) எஸ்தோனியா மற்றும் லாட்வியா

4. ஆஸ்திரிய பட்டத்து இளவரசர்

அ) பிரான்சிஸ் பெர்டினான்டு ஆ) பிரான்சிஸ் டியூக்

இ) பிரான்சிஸ் டி லெசப்ஸ் ஈ) பிரான்சிஸ் பேயாகன்

5. ஆஸ்திரியா செர்பியா மீது படையெடுத்த நாள்

அ) ஜூலை 28,1914 ஆ) ஜூன் 28, 1914

இ) மார்ச் 28, 1914 ஈ) ஆகஸ்ட் 28, 1914

6. ஜெர்மனி பிரான்சின் மீது படையெடுக்க இதன் வழியாகச் சென்றது

அ) நெதர்லாந்து ஆ) லக்ஸம்பர்க்

இ) ரைன்லாந்து ஈ) பெல்ஜியம்

7. துருக்கி தனது ஆதரவை வழங்கியது.

அ) கூட்டு நாடுகள் ஆ) அச்சு நாடுகள்

இ) மைய நாடுகள் ஈ) வளர்ச்சியடைந்த நாடுகள்

8. ஆங்கிலேயர்களுக்கு படுதோல்வியாக அமைந்தது.

அ) ஜெர்மானியப் படையெடுப்பு ஆ) பிரெஞ்சுப் படையெடுப்பு

இ) டார்டனல்ஸ் படையெடுப்பு ஈ) கியூபா படையெடுப்பு

9. ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்காவின் புகழ் பெற்ற வணிக கப்பல்

அ) லுப்டாப் ஆ) ராயல் இ) லூசிட்டானியா ஈ) பெர்லின்

10. ரஷ்யாவில் சார் வம்ச ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தவர்.

அ) லெனின் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) மார்டோவ் ஈ) ஸ்டாலின்

11. ஜெர்மானிய கப்பற்படை தகர்க்கப்பட்ட கடல்போர்

அ) ஜூட்லாந்து ஆ) டாகர் பாங்க் இ) வடகடல் ஈ) பால்டிக்கடல்

12. ஜெர்மனி அமைதியை வேண்டிய நாள்.

அ) நவம்பர்11, 1918 ஆ) நவம்பர் 21,1918

இ) நவம்பர் 12,1918 ஈ) நவம்பர் 22,1918

13. முதல் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அ) லண்டன் அமைதி மாநாடு ஆ) ரோம் அமைதி மாநாடு

இ) பெர்லின் அமைதி மாநாடு ஈ) பாரிஸ் அமைதி மாநாடு

14. சர்வதேச சங்கம் அதிகாரபூர்வமாகத் தோன்றிய நாள்.

அ) மார்ச் 7, 1930 ஆ) மார்ச் 2, 1928

இ) ஜனவரி 20, 1920 ஈ) ஜனவரி 20, 1924

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | கிளமன்சு | பிரிட்டன் |
| 2. | ஆர்லாண்டோ | பிரான்சு |
| 3. | லாயிட்ஸ் ஜார்ஜ் | ஜெர்மனி |
| 4. | உட்ரோ வில்சன் | ஆஸ்திரியா |
| 5. | கெய்சர் வில்லியம் II | ரஷ்யா |
| | | அமெரிக்கா |
| | | இத்தாலி |

II

| | | |
|---|---|---|
| 1. | வெர்செயில்ஸ் உடன்படிக்கை | ருமேனியா |
| 2. | டிரையனான் உடன் படிக்கை | துருக்கி |
| 3. | நியூலி உடன் படிக்கை | இத்தாலி |
| 4. | செவ்ரேஸ் உடன் படிக்கை | ஹங்கேரி |
| 5. | ஜெர்மைன் உடன் படிக்கை | ஆஸ்திரியா |
| | | ஜெர்மனி |
| | | பல்கேரியா |

## இ. சுருக்கமான விடையளி.

1. ஜெர்மனிக்கு குடியேற்றங்கள் ஏன் தேவைப்பட்டது ?
2. மொராக்கோ பிரச்சனை— குறிப்பு வரைக.
3. முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம் யாது ?
4. கிழக்கு முனைப் போர்க்களம் – விவரி.
5. கடற்போர் பற்றி சிறு குறிப்பு தருக.
6. முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன ?
7. வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
8. சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.
9. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை ?
10. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான எவையேனும் இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக.

## ஈ. ஒவ்வொரு தலைப்பின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ஜெர்மனியின் பேராசை

அ) முதல் உலகப் போரின் போது ஜெர்மனியின் அரசர் யார் ?

ஆ) அவரின் நம்பிக்கை என்ன ?

இ) அவரால் சகித்துக் கொள்ள முடியாதது எது ?

ஈ) எங்கு கப்பற்படைத் தளம் அமைத்திருந்தார் ?

2. பால்கன் பிரச்சனை

அ) பால்கன் நாடுகளைக் குறிப்பிடுக.

ஆ) முதல் பால்கன் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது ?

இ) ஏனைய பால்கன் நாடுகள் பல்கேரியா மீது ஏன் போர் தொடுத்தன ?

ஈ) இரண்டாம் பால்கன் போரின் முடிவு என்ன ?

3. உடனடிக்காரணம்

அ) போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவை எப்பொழுது ஆஸ்திரியா இணைத்தது ?

ஆ) ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர் யார் ?

இ) அவருக்கு நேர்ந்தது என்ன ?

ஈ) ஆஸ்திரியா என்ன செய்தது ?

4. போரின் போக்கு

அ) முதல் உலகப் போரின் காலம் என்ன ?

ஆ) மைய நாடுகள் யாவை ?

இ) நேச நாடுகள் யாவை ?

ஈ) போரில் உபயோகப்படுத்தப்பட்ட போர்க் கருவிகள் யாவை ?

5. கிழக்கு முனைப் போர்க்களம்

அ) துருக்கி எந்த ஆண்டு போரில் ஈடுப்பட்டது ?

ஆ) இது ஏன் ஒரு சாட்டையடியாகக் கருதப்படுகிறது ?

இ) பிரிட்டன் கலிபோலி தீபகற்பத்தை பிடிக்க விரும்பியது ஏன் ?

ஈ) டார்டனல்ஸ் படையெடுப்பின் விளைவுகள் யாவை ?

6. போர் விளைவுகள்

அ) உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் எவ்வாறு எழுதப்பட்டன ?

ஆ) ஜெர்மனி பிரான்சிடம் இழந்தவை யாவை ?

இ) மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த நாடுகள் யாவை ?

ஈ) புதிதாகத் தோன்றிய குடியரசுகள் யாவை ?

7. சர்வதேச சங்கம்

அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களை எழுதுக.

ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது ?

இ) உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் ?

ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது.

**உ. கீழ்க் கண்ட வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

1. பால்கன் பிரச்சனை முதல் உலகப் போருக்கு வழிவகுத்தது எவ்வாறு ?
2. முதல் உலகப் போரின் விளைவுகள் யாவை ?
3. சர்வதேச சங்கத்தின் சாதனைகளை விளக்குக.
4. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை விவரி.

**ஊ. செயல்முறை.**

ஐரோப்பிய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

அ) டானென் பர்க் ஆ) மார்ன் ஆறு இ) ஜட்லாந்து

ஈ) டார்டனல்ஸ் உ) டான்சிக்

# 3. இரு உலகப்போர்களுக்கிடையே உலக நிலை (கி.பி.1919–கி.பி.1939) – பொருளாதாரப் பெருமந்தம்

1929ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட பொருளாதார பெருமந்தம் இரு உலகப்போர்களுக்கிடையில் உலக நாடுகளிடையே ஏற்பட்ட முக்கிய நிகழ்வாகும். இது சோவியத் இரஷ்யாவைத் தவிர மற்ற பெரிய நாடுகளை அதிக அளவில் பாதித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொடங்கிய இப்பொருளாதாரச் சரிவு ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாடுகளையும் பாதித்தது.

### காரணங்கள்

அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவே பொருளாதாரப் பெருமந்தத்திற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. பங்குகளின் விலை உயரும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மக்கள் கடன் வாங்கி பங்குச் சந்தைகளில் முதலீடு செய்தது இப்பெருமந்தத்தின் காரணமாகும்.



ஹெர்பர்ட் ஹூவெர்

1929 ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசு தலைவராகப் பொறுப்பேற்ற ஹெர்பர்ட் ஹூவரின் காலத்தில் பங்கு வணிகம் உச்சக்கட்டத்தை அடைந்தது. பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்வதில் அமெரிக்க மக்கள் பேரார்வத்துடன் ஈடுபட்டனர். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் பங்குகள் தரும் பங்கு ஆதாயத்திற்கு மட்டுமின்றி அவற்றை மறுவிற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபத்திற்காகவும் பெருமளவில் பங்கு வணிகத்தில் முதலீடு செய்தனர். இதன் மூலம் வேகமாக செல்வந்தர்கள் ஆகலாம் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டது. 1929ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் பங்குகளில் மிகப் பெரியச் சரிவு ஏற்பட்டு, பங்குகளின் விலை சரியத்தொடங்கின.

இது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் மக்கள் விரைவாகத் தங்கள் பங்குகளை விற்க முற்பட்டனர். இதனால் பங்குகளின் விலை மேலும் வீழ்ச்சியடைந்தது. இதனைத் தொடர்ந்து வங்கிகள் செயல்பட முடியாதநிலை ஏற்பட்டதாலும், கடன் வழங்க இயலாததாலும், விவசாய உற்பத்தி, தொழில் வளர்ச்சி ஆகியவை வீழ்ச்சியடைந்தன.

### ஹூவரது மீட்பு நடவடிக்கைகள்

ஹூவர் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்று, பல்வேறு மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1932ஆம் ஆண்டு ஹூவரால் அமைக்கப்பட்ட புனரமைப்பு நிதி நிறுவனம், வங்கிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் கடனுதவி அளிக்க முன்வந்தது. இம்முயற்சி உடனடித் தீர்வைத் தராத காரணத்தால் ஹூவரின் ஆட்சியின் மீது அமெரிக்க மக்கள் நம்பிக்கை இழந்தனர்.

1932 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எப்.டி.ஆர் (FDR) என்றழைக்கப்பட்ட பிராங்களின் டி.ரூஸ்வெல்ட் "நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், அமெரிக்க மக்களுக்குப் புதிய பயனுரிமைக் கொள்கையை அர்ப்பணிக்க நான் உறுதியளிக்கிறேன்" என்று தமது தேர்தல்

அறிக்கையில் உறுதி அளித்தார். இதனால் தேர்தலில் வெற்றி பெற்று 1933ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் நாள் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.



பிராங்களின் –டி–ரூஸ்வெல்ட்

## எப்.டி.ரூஸ்வெல்ட்

- பொருளாதாரப் பெரும் தாழ்வை முடிவுக்குக் கொண்டுவர எப்.டி.ரூஸ்வெல்ட் (FDR) புதிய பயனுரிமை(New Deal) என்ற புதிய சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார். இது உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- புதிய சீரமைப்பு திட்டத்தின் அடிப்படையில் டென்னசி பள்ளத்தாக்கு திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் மூலம் இயற்கைவளத்தைக் கொண்டு தொழிற் பெருக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பது ஆகும். அதன்படி அணைகள் கட்டுதல், மின்உற்பத்தி செய்தல், கப்பல் போக்குவரத்துக்கு வழி வகுத்தல், வெள்ளத்தடுப்புப் பணிகளில் ஈடுபடுதல், மண்வளத்தைப் பாதுகாத்தல் வனவளப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் போன்றவை மேம்படுத்தப்பட்டன.
- கூட்டாட்சி அவசர நிவாரண நிர்வாகம் (Federal Emergency Relief Administration) மூலம் 500 மில்லியன் டாலர்கள் மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியாக வழங்கப்பட்டது.
- கூட்டாட்சி ரிசர்வ் வங்கி (Federal Reserve Bank) அமைக்கப்பட்டு வங்கி நிறுவனங்களுக்கும் தொழிற் சாலைகளுக்கும் கடன் வழங்கப்பட்டது.
- பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம் (The Security Exchange Act 1934) மூலம் பங்குச் சந்தையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது.
- தேசிய தொழில் மீட்புச் சட்டம் (The National Industrial Recovery Act) கொண்டுவரப்பட்டு தொழிற் சாலைகளில் சம்பள உயர்வு, பணிநேரக்குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.
- வேளாண்மைப் பொருள் சீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் அரசு விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க வகை ஏற்பட்டது. இம்மானியம் அவர்கள் உற்பத்தி செய்யும் தானியத்தின் அளவைக் குறைத்து விலை உயர்வுக்கு வழிவகுத்தது.

## விளைவுகள்

- புதிய பயனுரிமைச் சட்டத்தின் ஒரு சில திட்டங்களைத் தவிர்த்து மற்ற அனைத்தும் அமெரிக்க பொருளாதாரத்தை வலுவடையச் செய்தன. மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கை ஏற்படச் செய்தன. பொருளாதார மேன்மைக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தன.

- புதிய பயனுரிமைச் சட்டத்தின் சில திட்டங்களான முதலாளி, தொழிலாளி கூட்டுப் பேச்சுவார்த்தை, பங்கு வர்த்தனை முறைப்படுத்துதல் மற்றும் வேலை நேரக்கட்டுப்பாடுகள் முதலியன இன்றும் அமெரிக்கர்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாகத் திகழ்கின்றன. இந்த பயனுரிமைத் திட்டம் உலக நாடுகளின் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. இதன் விளைவாக மீண்டும் 1940 ஆம் ஆண்டில் அமெரிக்கப் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. பொருளாதாரப் பெருமந்தம் தோன்றிய நாடு.

   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) பிரான்சு ஈ) ஜெர்மனி

2. 1929 இல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்.

   அ) தியோடர் ரூஸ்வெல்ட் ஆ) உட்ரோ வில்சன்

   இ) ஹெர்பர்ட் ஹுவர் ஈ) எப்.டி.ரூஸ்வெல்ட்

3. அமெரிக்கர்கள் பேரார்வத்துடன் ஈடுபட்ட துறை

   அ) வணிகம் ஆ) சூதாட்டம் இ) சினிமா ஈ) பங்கு வணிகச்சந்தை

4. எப்.டி.ரூஸ்வெல்ட் பதவியேற்ற நாள்

   அ) மார்ச் 4,1933 ஆ) மார்ச் 4,1993 இ) ஏப்ரல் 6,1933 ஈ) ஏப்ரல் 6, 1943

5. அமெரிக்கப் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது.

   அ) 1930 ஆ) 1940 இ) 1950 ஈ) 1945

### ஆ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. பங்குச் சந்தை சரிவு | வங்கிகள் மற்றும் தொழிற்சாலைகள் |
| 2. புனரமைப்பு நிதி நிறுவனம் | கடனுதவிகள் |
| 3. பொருளாதாரப் பெருமந்தம் | பங்குச் சந்தை உரிமம் |
| 4. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி | விவசாயிகளுக்கு மானியம் |
| 5. பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம் | பங்குச் சந்தைகளில் கடன் முதலீடு |
| | 1929 |

### இ. சுருக்கமான விடை தருக.

1. பொருளாதாரப் பெருமந்தம் தோன்றக் காரணங்கள் என்ன ?
2. தேசிய தொழில் மீட்புச் சட்டம் – குறிப்பு வரைக.
3. வேளாண்மைப் பொருள் சீரமைப்புச் சட்டம் பற்றி எழுதுக.

## ஈ. ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

1. பிராங்களின் டி. ரூஸ்வெல்ட்

அ) ஜனாதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது ?

ஆ) பிராங்களின் டி. ரூஸ்வெல்ட் எவ்வாறு அழைக்கப்பட்டார் ?

இ) அவரது தேர்தல் அறிக்கை யாது ?

ஈ) அவர் உருவாக்கிய கொள்கையின் பெயர் என்ன ?

2. நிவாரணப் பணிகளின் விளைவுகள்

அ) மக்களுக்கு யார் மீது நம்பிக்கை ஏற்படச் செய்தது ?

ஆ) எதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது ?

இ) அமெரிக்கர்களின் வாழ்க்கையில் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில கருத்துக்களை எழுதுக.

ஈ) எது உலக நாடுகளின் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது ?

## உ. பத்தி வினா.

1. பிராங்களின் டி.ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் பற்றி விரிவான விடையளி.

# 4. இத்தாலியில் பாசிசம் (கி.பி.1922–கி.பி.1945)

பாசிசம் என்னும் சொல் 'பாசிஸ்' என்னும் இலத்தீன் வார்த்தையில் இருந்து தோன்றியது. இதற்கு 'கூட்டு' அல்லது 'குழு' என்று பொருள். இத்தாலிய பாசிசத் தலைவர் முசோலினி எழுச்சி மிக்க இத்தாலிய இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்குப் பாசிஸ் என்று பெயரிட்டார். இப்பாசிஸ் நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டவர்களுக்குப் பதிலடி கொடுத்தது.

ஒரே தலைமை, சர்வாதிகாரியின் கீழ் ஒரே கட்சி ஆட்சி, பயங்கரவாதம், பொருளாதார ஆளுமை–இவைகளே பாசிசமாகிய கட்டிடத்தின் நான்கு முக்கியத் தூண்களாகும்.

முசோலினி பாசிசக் கொள்கைகளை அதிகமாக நம்பியதோடு, அதனோடு தொடர்புடைய 'நம்பு', 'கீழ்ப்படி' , 'போராடு' என்று மூன்று கட்டளைகளையும், 'அதிகப்படை, அதிக மதிப்பு' என்ற முழக்கத்தையும் நடைமுறைப்படுத்தினார்.

## பாசிசம் – எழுச்சிக்கான காரணங்கள்

இத்தாலியின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகள் பாசிசம் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தன.

## பொருளாதாரச் சிக்கல்

முதலாம் உலகப்போரில் ஈடுபட்டதின் விளைவாக இத்தாலிக்கு பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டது. நாட்டின் கடன் சுமை பன்மடங்காக அதிகரித்தது. பாரிஸ் அமைதி மாநாட்டில் இத்தாலிக்கு அரசியல் நன்மைகளைப் பெறவும் மற்றும் சட்ட ஒழுங்கை நிலை நாட்டவும் அரசாங்கம் தவறிவிட்டது என்று இத்தாலிய மக்கள் அதிருப்தி அடைந்தனர். நிலையான ஆட்சியைத் தரவும் அரசாங்கத்தால் இயலவில்லை. 'இத்தாலி போரில் வென்றது ஆனால் அமைதியை இழந்தது'.

## சோசலிஸ்டுகளின் செயல்பாடுகள்

நாட்டில் நிலவி வந்த சோசலிசக் கருத்துக்கள் மேலும் அமைதியைக் குலைத்தது எனலாம். இம்மாதிரியான அரசியல் குழப்பங்கள் 1919இல் இத்தாலியில் பாசிசம் தோன்ற ஏதுவாக அமைந்தன. இத்தகைய சூழ்நிலையை மாற்றத் தேவையான ஒரு மாபெரும் தலைமை முசோலினி மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

## பெனிடோ முசோலினி (1883 –1945)

பெனிடோ அமில்கேர் ஆண்டிரியா முசோலினி 1883 ஆம் ஆண்டு ஜீலை 29 ஆம் நாள் மத்திய இத்தாலியில் ரோமக்னா என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை ஒரு தொழிலாளி. தாயார் ஆரம்ப பள்ளி ஆசிரியை ஆவார்.



முசோலினி

1902 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற முசோலினி ஒரு பள்ளி ஆசிரியர் ஆனார். பிறகு அப்பதவியை விட்டுவிட்டு சுவிட்சர்லாந்து வந்தடைந்தார். அங்கு லெனினை சந்தித்து அவரது கோட்பாடுகளைக் கற்றார். பிறகு ஆஸ்திரியா சென்று அங்கு இத்தாலிய சமதர்ம பத்திரிக்கை ஆசிரியரானார். இதனால் ஆஸ்திரியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். இத்தாலி திரும்பிய இவர் இத்தாலிய சமதர்ம பத்திரிக்கை

'அவந்தி'யின் ஆசிரியரானார். முதல் உலகப்போரில் ஒரு சாதாரண வீரராகப் பங்கேற்றார். போருக்குப் பிறகு இத்தாலிய இளைஞர்களை ஒன்று திரட்டினார். இவர்கள் பாசிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் உதவியோடு முசோலினி 1921 நவம்பர் திங்களில் தேசிய பாசிசக் கட்சியை உருவாக்கினார்.

### அதிகாரத்தைக் கைப்பற்றுதல்

1922– ஆம் ஆண்டு அக்டோபர் 30–ம் நாள் முசோலினி தலைமையில் பாசிஸ்டுகள் ரோம் நகரை நோக்கி அணிவகுத்துச் சென்று தங்கள் பலத்தைக் காட்டினர். இதனையறிந்த அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் அரசாங்கத்தை அமைக்கும்படி முசோலினிக்கு வேண்டுகோள் விடுத்தார். இதனைத் தொடர்ந்து எத்தகைய இரத்தமும் சிந்தாமல் பாசிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இருப்பினும் பின்னர் அடக்குமுறை, கொலை மற்றும் நாடு கடத்துதல் பெருகின. இறுதியில் முசோலினியின் சர்வாதிகார ஆட்சி இத்தாலியில் மலர்ந்தது. இந்த சர்வாதிகார ஆட்சி கி.பி. 1922 முதல் கி.பி. 1945 வரை நீடித்தது.

### பாசிசக் கட்சி

முசோலினியின் கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் 'கருஞ்சட்டையினர்' என அழைக்கப்பட்டனர். அவர்கள் முசோலினியை 'டியூஸ்'(DUCE) என்றழைத்தனர். இவருடைய இரகசியக் காவல் படை 'ஒவ்ரா'(OVRA) என்றழைக்கப்பட்டது.

### பாசிசக் கொள்கையின் நோக்கம்

- நாட்டை உயர்நிலைக்குக் கொணர்தல்,
- தனிமனிதனின் உடைமைகளைப் பாதுகாத்தல் மற்றும்
- ஆற்றல் மிக்க வெளியுறவுக் கொள்கை

### பாசிசக் கொள்கையின் இலக்கு (Motto)

- எல்லாம் நாட்டிற்காகவே
- நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை
- நாட்டிற்கு வெளியே எதுவுமில்லை

### முசோலினியின் சாதனைகள்

முசோலினி ஒரு சிறந்த தலைவராக விளங்கினார். இத்தாலியை ஒரு வலிமை பொருந்திய நாடாக்க விரும்பினார். எனவே, பல்வேறு நடைவடிக்கைகளை மேற்கொண்டார். இத்தாலியில் அமைதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்டினார். நிலையான அரசை நிறுவினார். தொழில் துறையில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கொண்டுவந்தார்.



ஹிட்லருடன் முசோலினி

இவரால் வெளியிடப்பட்ட தொழில் பட்டயம் (Charter of Labour) தொழிலாளர்களின் நலனுக்கு மிகவும் உகந்ததாக அமைந்தது. அதன் மூலம் தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்கி பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தினார். தரிசு நிலங்களை மாற்றியமைத்து விளைச்சலைப் பெருக்கினார். நீர் மின்சக்தி உற்பத்தியை உருவாக்கினார். இவரது காலத்தில் போக்குவரத்து துறை மற்றும் இரயில்வேதுறை முன்னேற்றம் கண்டது. இவற்றின் மூலம் இத்தாலி தனது சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாடாக முன்னேற்றம் கண்டது.

திறமையான நிர்வாகியான முசோலினி 1929 ஆம் ஆண்டு போப்புடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். இதன் மூலம் சுமார் அறுபது ஆண்டு காலமாக போப்பிற்கும்,

இத்தாலிய அரசுக்குமிடையே நிலவிவந்த போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். இந்த உடன்படிக்கை மூலம் வாடிகன் நகரில் போப்பாட்சியை முசோலினி அங்கீகரித்தார். இதற்கு மாறாக, போப், ரோம் நகரில் அரசரின் மேலாண்மையை அங்கீகரித்தார். இந்த உடன்பாடு முசோலினியின் பெருமை மற்றும் புகழை மேலும் உயர்த்தியது.

### முசோலினியின் வெளியுறவுக் கொள்கை

முசோலினி தீவிரமான மற்றும் முற்போக்கான அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். இத்தாலியின் பெருமை மற்றும் புகழை உலக அரங்கில் உயரச் செய்தார். பண்டைய பெருமைமிக்க ரோமானியப் பேரரசை மீண்டும் உருவாக்குவதே அவரின் நோக்கமாக இருந்தது. இத்தாலியைப்பேரரசாக மாற்றவேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும் என்பதே முசோலினியின் முழக்கம் ஆகும். 1936–ல் முசோலினி எத்தியோப்பியாவைக் கைப்பற்றினார். 1937–ல் இவர் சர்வதேச சங்கத்தில் இருந்து வெளியேறினார்.

1939–ல் இவர் அல்பேனியாவைக் கைப்பற்றினார். ஹிட்லரின் பொதுவான கொள்கையை ஏற்றுக் கொண்டார். இரண்டாம் உலகப்போர் ஏற்படக்காரணமான ரோம்–பெர்லின்–டோக்கியோ உடன்படிக்கையில் இணைந்தார். இரண்டாவது உலகப்போர் இத்தாலிக்கு பெரும் இழப்பினைத் தேடித்தந்தது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது 1941 இல் இத்தாலி தனது ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது. முசோலினியால் இத்தாலியின் அழிவை தடுக்க இயலவில்லை. 1943 ஆம் ஆண்டு நேச நாடுகளின் கூட்டுப் படைகள் சிசிலித்தீவைக் குண்டு வீசித் தாக்கிக் கைப்பற்றியது. முசோலினி தப்பிச் செல்ல முயன்ற போது ஒரு இத்தாலியக் குடிமகனால் சுட்டுக்கொல்லப்பட்டார். இத்தாலியில் முசோலினியின் மறைவு பாசிச ஆட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. பின்னர் இத்தாலியில் பாராளுமன்ற மக்களாட்சி முறை மலர்ந்தது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. பாசிச கட்சியைத் தோற்றுவித்தவர்

   அ) ஹிட்லர் ஆ) முசோலினி இ) ஸ்டாலின் ஈ) லெனின்

2. முசோலினி தேசிய பாசிச கட்சியைத் தோற்றுவித்த ஆண்டு

   அ) நவம்பர், 1921 ஆ) டிசம்பர், 1921

   இ) ஜனவரி, 1921 ஈ) பிப்ரவரி, 1921

3. முசோலினியால் ஏற்படுத்தப்பட்டது.

   அ) ஜனநாயக ஆட்சி ஆ) கம்யூனிச ஆட்சி

   இ) நிலையான ஆட்சி ஈ) குடியரசு

4. தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சிறந்த நிவாரணம்

   அ) சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆ) ஆலைச் சட்டம்

   இ) தொழில் பட்டயம் ஈ) தொழிலாளர் ஒன்றியம்

5. முசோலினியுடன் பொதுக் கொள்கையை ஏற்படுத்திக் கொண்டவர்

   அ) சர்ச்சில் ஆ) ஹிட்லர் இ) ஸ்டாலின் ஈ) லெனின்

6. சர்வதேச சங்கத்திலிருந்து முசோலினி விலகிய ஆண்டு

   அ) 1931 ஆ) 1932 இ) 1935 ஈ) 1937

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | டியூஸ் | முசோலினியின் இரகசிய காவல்படை |
| 2. | கருஞ்சட்டை | 1922 |
| 3. | ஒவ்ரா | 1924 |
| 4. | ரோம் அணிவகுப்பு | முசோலினி |
| 5. | அல்பேனியாவை கைப்பற்றுதல் | முசோலினியின் தொண்டர்கள் |
| | | 1939 |

## இ. குறுவினா.

1. பாசிசம் – பொருள் கூறுக.
2. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை ?
3. பாசிசம் தோன்றுவதற்கான காரணங்களை எழுதுக.
4. முசோலினி எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றினார் ?
5. முசோலினியின் சாதனைகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.
6. முசோலினி, அரசருக்கும் போப்பாண்டவருக்கும் இடையே இருந்த வேற்றுமையை எவ்வாறு களைந்தார் ?

## ஈ. ஒவ்வொரு தலைப்பின் கீழ் வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாசிசக் கட்சி

   அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார் ?

   ஆ) முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக

   இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன ?

   ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன ?

2. பாசிசத்தின் சாதனைகள்

   அ) தொழில் உற்பத்தியில் முசோலினி அறிவித்த மாற்றங்கள் யாவை ?

   ஆ) தொழில் பட்டயம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

   இ) வேளாண்மைத் துறையில் முசோலினி எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

   ஈ) லேட்டரன் உடன்படிக்கை எப்பொழுது கையெழுத்தானது ?

3. முசோலினியின் தீவிர வெளியுறவுக் கொள்கை

   அ) தேசத்தின் முன் முசோலினியின் முழக்கம் என்ன ?

   ஆ) முசோலினி எப்பொழுது அல்பேனியாவைக் கைப்பற்றினார் ?

   இ) கூட்டு நாடுகள் குண்டு வீசிய தீவு யாது ?

   ஈ) முசோலினியின் முடிவு என்ன ?

## உ. பத்தி வினா.

1. முசோலினியின் தலைமையில் பாசிசம் படைத்த சாதனைகள் யாவை ?
2. முசோலினியின் தீவிர வெளியுறவுக் கொள்கை பற்றி ஒரு பத்தி எழுதுக.